சார்பு நீதிமன்றம், பரமத்தி.
முன்னிலை திரு. எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2025–ம் ஆண்டு ஜூலை திங்கள் 21–ஆம் நாள் திங்கட்கிழமை

வ.ம.எண்.02/2024 இன் ஏ.எஸ்.எண்.20/2024

1) சரோஜா

2) வேலநாதன்

3) உஷாராணி ... மேல்முறையீட்டு வாதிகள் / அசல் தாவா 1, 3, 5 பிரதிவதிகள்

/எதிர்/

1) மாரப்பன்

2) சிதம்பரம்

3) சவீதா

4) ரங்கசாமி .... எதிர்மனுதாரர்கள்/ அசல் தாவா வாதிகள் மற்றும் 2, 4 பிரதிவாதிகள்

இம்மனு 14.07.2025–ஆம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.எம்.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ஏ.ஜெயபால் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

உத்தரவு

இம்மனுவானது, கடந்த 06.08.2024–ஆம் தேதியில் மேல்முறையீட்டில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி, கட்டளை 41 விதி 31 சி.பி.சி.–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு சுருக்கம்</u>

எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையின் பேரில், மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார்கள். அம்மேல்முறையீட்டில் இம்மனுதாரர்கள் ஆஜராக கடந்த 06.08.2024 தேதியில் வாய்தா இடப்பட்டிருந்தது. அன்றைய தினம் 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால், நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. 1ம் மனுதாரரின் மகனாக 2ம் மனுதாரரும் சிகிச்சைக்காக, 1ம் மனுதாரருடன் இருந்ததால், அவரும் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. அதனால், மேற்படி தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், ஆகவே, மேற்படி உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரை சுருக்கம்</u>

மனு சங்கதிகள் உண்மையில்லை. மனுதாரர்கள் நல்ல உடல்நிலையில் இருந்து வந்தார்கள். இவ்வழக்கில், வேண்டுமென்றே ஆஜராகாமல் இருந்துவிட்டு, தற்போது, பொய்யான காரணங்களை குறிப்பிட்டு மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள். அதனால், இம்மனுவைத்தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. <u>தீர்வு</u>

தற்போது இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

6) இருதரப்பு வாதங்களும், ஆவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் மேல்முறையீட்டு வழக்கில், 1, 2 எதிர்மனுதாரர்கள். இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டார்கள். அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக, இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி மேல்முறையீட்டில், இம்மனுதாரர்கள் ஆஜராகாததால், அவர்களுக்கு எதிராக கடந்த 06.08.2024 தேதியில், ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

7) மேல்முறையீட்டு வழக்கில் மனுதாரர்கள் ஆஜராகததற்கு காரணமாக 1ம் மனுதாரருக்கு கடந்த 06.08.2024 தேதியில் உடல்நிலை சரியல்லை என்றும், வைத்தியத்திற்காக 1ம் மனுதாரருடன், 2ம் மனுதாரரும் இருந்ததால், நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும் கூறியுள்ளார்கள். ஆனால், 1ம் மனுதாரர் மேற்படி தேதியில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கும், அவர் சிகிச்சை பெற்றார் என்பதற்கும் எவ்வித ஆதாரங்களும் தாக்கல் செய்யவில்லை. ஆனாலும், இம்மனு மேல்முறையீட்டு வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்த பிறகு அதிக காலதாமதமின்றி இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். மேலும், மேல்முறையீட்டு வழக்கில், தற்போது வரை வாதுரை கேட்கப்படாமல், மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. ஆகவே, மேல்முறையீட்டு வழக்கில் இருதரப்பினர்களுக்கும் உரிய வாய்ப்பு அளித்தும், மேல்முறையீட்டை முடிவு செய்தால்தான், இயற்கை நீதிகோட்பாட்டின் அடிப்படையில் சரியாக இருக்கும், ஆகவே, மேல்முறையீட்டு வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கை எடுத்துரைப்பதற்காக இம்மனுவை அனுமதிக்கலாம் என்றும், அதிக காலதாமதமின்றி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், செலவுத்தொகை பிடிக்கவேண்டியது இல்லை என்றும் முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 21.07.2025–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.07.21 18:52:48 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.